

சட்டமன்றப் பேரவையில், நேற்று (21.1.2026) சட்டமன்றப் பேரவை முன்னாள் உறுப்பினர்கள் சா.பன்னீர் செல்வம், எல்.கணேசன் ஆகியோரது மறைவிற்கு இரங்கல் குறிப்புகளும், முருகப்பா குழுமத்தின் முன்னாள் தலைவர் அருணாசலம் வெள்ளையன், கவிஞர் ஈரோடு தமிழன்பன், திரைப்படத் தயாரிப்பாளர் ஏ.வி.எம்.சரவணன், முதுபெரும் அரசியல் தலைவர் சிவராஜ் பாட்டீல், சட்டமன்றப் பேரவை உறுப்பினர் கே.பொன்னுசாமி ஆகியோரது மறைவிற்கு இரங்கல் தீர்மானங்களும், நிறைவேற்றப்பட்டு, மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது.

## ஓய்வை மறந்திடு!

# முழுமையான வெற்றி கைவசமாகும் வரை உழைத்திடு!

### மாவட்டச் செயலாளர்கள் கூட்டத்தையொட்டி – கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் வலைதளப் பதிவு!

சென்னை,ஜன.22-

சென்னை - அண்ணா அறிவாலயம் - “கலைஞர் அரங்கில்” நேற்று முன்தினம் மாலை, கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவயர்கள் தலைமையில் மாவட்டச் செயலாளர்கள் கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தையடுத்து கழகத் தலைவர் அவர்கள் விடுத்த வலைதளப் பதிவில், “ஓய்வை மறந்திடு! முழுமையான வெற்றி கைவசமாகும் வரை உழைத்திடு!” எனச் சூளுரைத்துள்ளார்.

கழகத் தலைவர் அவர்களின் அந்த வலைதளப் பதிவு வருமாறு:

**ஓய்வை மறந்திடு; முழுமையான வெற்றி கைவசமாகும் வரை உழைத்திடு!**

**அடுத்த 3 மாதங்களும் அமைச்சர் முதல் கிளைக் கழக நிர்வாகி வரை கண்துஞ்சாது களத்தில் சுழல வேண்டும்!**

**இளைஞரணி நிர்வாகிகள் மாநாடுகள், “வெல்லும் தமிழ்ப் பெண்கள்” மாநாடுகள், மண்டல அளவிலான ‘என் வாக்குச் சாவடி வெற்றி வாக்குச்சாவடி’ பயிற்சிக் கூட்டங்கள், திருச்சியில் மாபெரும் மாநில மாநாடு என - இனி ஒவ்வொரு நாளும் நமது செயல்பாடுகளும் பரப்புரைகளும் தமிழ்நாட்டை நிறைக்கப் போகின்றன. வெல்வோம் ஒன்றாக!**

இவ்வாறு அந்த வலைதளப் பதிவில் கழகத் தலைவர், முதல்வர் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

# பட்டிக்காடும் பட்டணமும்



**பட்டிக்காடு :** ஏன் தம்பி....! ஆளுநர் உரையை வாசிக்கத் தவறிய ஆர்.என். ரவி, பேரவையை விட்டு வெளியேறிய சில நிமிடங்களிலேயே, 'திராவிட மாடல்' ஆட்சியை எதிர்த்து அறிக்கை வெளியிட்டிருக்கிறாரே ?

**பட்டணம் :** **ஆமாங்கய்யா; உங்களுக்குத் தெரியாதா ? தமிழ்நாடு சட்டப் பேரவைக்கு இரண்டு எதிர்க்கட்சித் தலைவர்கள்!**

**ஒருவர் பேரவையினால் அங்கீகரிக்கப்பட்ட எடப்பாடி;**

**மற்றொருவர் ஒன்றிய பா.ஜ.க.வினால் அங்கீகாரம் பெற்ற ஆர்.என்.ரவி!**

## மொழிப்போர்த் தளபதி எல்.கணேசன் –

# ஈரோடு தமிழன்பன் - ஏ.வி.எம். சரவணன் - கே. பொன்னுசாமிக்கு இரங்கல் தீர்மானம்!

## சட்டப்பேரவையில் நிறைவேற்றம்!

**சென்னை, ஜன. 22-**

**சட்டப்பேரவையில் நேற்று மறைந்த முன்னாள் உறுபபினர்கள் சா.பன்னீர் செல்வம், மொழிப்போர்த் தளபதி எல்.கணேசன் ஆகியோருக்கு இரங்கல் குறித்தும், மறைந்த தொழிலதிபர் அருணாசலம் வெள்ளையன், கவிப்பேரருவி ஈரோடு தமிழன்பன், திரைப்படத் தயாரிப்பாளர் ஏ.வி.எம். சரவணன், ஒன்றிய முன்னாள் அமைச்சர் சிவராஜ் பாட்டீல் மற்றும் மறைந்த எம்.எல்.ஏ. கே.பொன்னுசாமி ஆகியோர் மறைவுக்கு இரங்கல் தீர்மானம் கொண்டு வரப் பெற்று நிறைவேற்றப்பட்டது.**

சட்டப் பேரவை நேற்று கூடியதும் பேரவைத் தலைவர் மு.அப்பாவு அவர்கள் மறைந்த சட்டப் பேரவை முன்னாள் உறுப்பினர்கள் குறித்து படித்த இரங்கல் குறிப்புகள் வருமாறு:

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை முன்னாள் உறுப்பினர்களான சா.பன்னீர் செல்வம் அவர்கள் 24.11.2025 அன்றும், எல்.கணேசன் அவர்கள் 4.1.2026 அன்றும் மறைவுற்ற செய்தியினை இப் பேரவைக்கு வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன்.


சா.பன்னீர்செல்வம் அவர்கள், 1991-96 ஆம் ஆண்டுகளில் திண்டிவனம் தொகுதியில் இருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்கு தேர்ந்தெடுக்கப்பட்டு திறம்பட பணியாற்றினார்.

**மொழிப்போர்த் தளபதி எல்.கணேசன்**

எல்.கணேசன் அவர்கள், 1967-1971, 1971-76 மற்றும் 1989-91 ஆகிய ஆண்டுகளில் ஒரத்தநாடு தொகுதியில் இருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்கு தேர்ந்தெடுக்கப்பட்டு பாராட்டத்தக்க வகையில் பணியாற்றினார்.

மேலும் 1980-86 ஆம் ஆண்டுகளில் மாநிலங்களவை உறுப்பினராகவும், 1986 ஆம் ஆண்டில் தமிழ்நாடு சட்டமன்ற மேலவை உறுப்பினராகவும், 1989-91 ஆம் ஆண்டுகளில் முதலமைச்சரின் ஆட்சி மன்றச் செயலாளராகவும் 2004-2009 ஆம் ஆண்டுகளில் மக்களவை உறுப்பினராகவும் சிறந்த முறையில் பணியாற்றினார்.

இம் முன்னாள் உறுப்பினர்களின் மறைவால் அவர்களை பிரிந்து வருந்தும் அவர் தம் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கலையும் அனுதாபத்தையும் இப் பேரவையின் சார்பிலும் என் சார்பிலும் தெரிவித்துக் கொள்கிறேன்.









**இரங்கல் தீர்மானங்கள்!**

இதனையடுத்து இரங்கல் தீர்மானங்களை பேரவைத் தலைவர் மு.அப்பாவு அவர்கள் படித்தார்.

**முருகப்பா குழும முன்னாள் தலைவர் தொழிலதிபர் அருணாசலம் வெள்ளையன் குறித்த இரங்கல் தீர்மானம்!**

பிரபல தொழிலதிபரும், கோரமண்டல் இன்டர்நேஷனல் நிறுவனத்தின் தலைவருமான அருணாசலம் வெள்ளையன் அவர்கள் 17.11.2025 அன்று மறைவுற்ற செய்தியறிந்து இப்பேரவை அதிர்ச்சியும் ஆற்றொண்ணா துயரமும் கொள்கிறது. தொழில் துறையில் தனக்கென தனி முத்திரை பதித்த அருணாசலம் வெள்ளையன் அவர்கள் முருகப்பா குழுமத்தின் வணியகங்களை விரிவுப்படுத்தி யதிலும் அவற்றின் செயல்பாட்டினை மேம்படுத்தியதிலும் மிக முக்கிய பங்கு வகித்து சிறப்புக்குரியவராவார். அன்னாரது மறைவால் அவரை இழந்து வாடும் அவர் தம் குடும்பத்தி னர் உள்ளிட்ட அனைவருக்கும் இப் பேரவை தனது ஆழ்ந்த இரங்கலையும் அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறது.

**கவிப்பேரருவி ஈரோடு தமிழன்பன் குறித்த இரங்கல் தீர்மானம்!**

ஈரோடு தமிழன்பன் என்கிற ந.ஜெகதீசன் பிரபல கவிஞர் அவர்கள் மறைவு குறித்து; சிறந்த கவிஞரும் எழுத்தாளருமான ஈரோடு தமிழன்பன் என்கிற ந.ஜெகதீசன் அவர்கள் 22.11.2025 மறைவுற்ற செய்தியறிந்து இப்பேரவை அதிர்ச்சியும் ஆற்றொண்ணா துயரமும் கொள்கிறது. மரபுக் கவிதை, புதுக்கவிதை, சிறுகதை, நாடகம் மற்றும் இலக்கியம் என பல்வேறு துறைகளில் சிறந்த படைப்புகளை அளித்த ஈரோடு தமிழன்பன் அவர்கள் பாவேந்தர் பாரதிதாசன் அவர்களுடன் நெருங்கிப் பழகிய சிறப்புக்குரியவராவார். சென்னை தொலைக்காட்சி நிலையத்தில் செய்தி வாசிப்பாளராக தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத்தின் உறுப்பினர், அறிவியல் தமிழ் மன்ற உறுப்பினர், அரிமா நோக்கு இதழின் ஆசிரியர் என பல்வேறு பொறுப்புகளில் திறம்பட பணியாற்றியவர். கலைமாமணி, சாகித்ய அகாதமி , பாரதிதாசன் விருது உள்ளிட்ட உயரிய விருதினைப் பெற்ற பெருமைக்குரியவர். அன்னாரது மறைவால் அவரை இழந்து வாடும் அவரது குடும்பத்தினர் தமிழறிஞர்கள் உள்ளிட்ட அனைவருக்கும் இப் பேரவை தனது அழ்ந்த இரங்கலையும் அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறது.

**பிரபல திரைப்பட தயாரிப்பாளர் ஏ.வி.எம். சரவணன் அவர்கள் மறைவு குறித்த இரங்கல் தீர்மானம்!**

பிரபல திரைப்படத் தயாரிப்பாளரும் ஏ.வி.எம். நிறுவனத்தின் உரிமையாளருமான ஏ.வி.எம். சரவணன் அவர்கள் 4.12.2025 அன்று மறைவுற்ற செய்தியறிந்து இப்பேரவை அதிர்ச்சியும் ஆற்றொண்ணா துயரமும் கொள்கிறது. ஏ.வி.எம். சரவணன் அவர்கள் தமிழ்த் திரைஉலகின் முதுபெரும் ஆளுமையின் ஒருவராக திகழ்ந்த போதிலும் அனை வரிடத்திலும் எளிமையுடனும், பணிவுடனும் அன்போடும் பழகியவர். தமிழ்த் திரை உலகின் பாதையை வடிவமைத்து பல முன்னோடி படைப்புகளை அளித்து வரும் ஏ.வி.எம். நிறுவனத்தை திறம்பட வழி நடத்தியவர். அன்னாரது மறைவால் அவரை இழந்து வாடும் அவர் தம் குடும்பத்தினருக்கும், தமிழ்த் திரை உலகத்தினர் உள்ளிட்ட அனைவருக்கும் இப் பேரவை தனது ஆழ்ந்த இரங்கலையும் அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறது.

**முதுபெரும் அரசியல் தலைவர் சிவராஜ் பாட்டீல் அவர்கள் மறைவு குறித்த இரங்கல் தீர்மானம்!**

இந்திய அரசியலில் முதுபெரும் தலைவரும் மக்களவை முன்னாள் தலைவருமான சிவராஜ் பாட்டீல் அவர்கள் 12.12.2025 அன்று மறைவுற்ற செய்தியறிந்து இப்பேரவை அதிர்ச்சியும் ஆற்றொண்ணா துயரமும் கொள்கிறது. தம்மை பொது வாழ்வுக்கு அர்ப்பணித்து அனுபவமிக்க அரசியல் தலைவராக திகழ்ந்த சிவராஜ் பாட்டீல் அவர்கள் 7 முறை மக்களவை உறுப்பினராக சிறப்புற பணியாற்றியவர். மக்களவை தலைவராகவும், துணைத் தலைவராகவும் பணியாற்றுகையில் அனைவராலும் பாராட்டுப் பெற்றவர்.

பஞ்சாப் மற்றும் இராஜஸ்தான் மாநிலங்களின் ஆளுநர், ஒன்றிய அமைச்சர், மாநிலங்களவை உறுப்பினர் மகாராஷ்டிரா சட்டமன்றப் பேரவைத் தலைவர் மற்றும் துணைத் தலைவர் உள்ளிட்ட பல்வேறு உயரிய பொறுப்புகளில் திறம்பட பணியாற்றியவர். அன்னாரது மறைவால் அவரை இழந்து வாடும் அவர்தம் குடும்பத்தினர் அவர் சார்ந்த கட்சி தொண்டர்கள் அனைவருக்கும் இப் பேரவை தனது ஆழ்ந்த இரங்கலையும் அனுதாபத்தையும் தெரிவித்துக்கொள்கிறது.

**சட்டமன்ற பேரவை உறுப்பினர் கே.பொன்னுசாமி அவர்கள் மறைவு குறித்த இரங்கல் தீர்மானம்!**

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் உறுப்பினர் கே.பொன்னுசாமி அவர்கள் 23.10.2025 அன்று மறைவுற்ற செய்தியறிந்து இப் பேரவை அதிர்ச்சியும் ஆற்றொண்ணா துயரமும் கொள்கிறது. கே.பொன்னுசாமி அவர்கள் 2006 முதல் 2011 வரையிலும் மற்றும் 2021 ஆம் ஆண்டு முதல் சேந்தமங்கலம் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்ற பேரவைக்கு தேர்ந்தெடுக்கப்பட்டு சிறப்பாக பணியாற்றியவர். அரசின் நலத் திட்டங்களை தனது தொகுதி மக்களுக்கு கொண்டு செல்வதில் மிகுந்த அக்கறை காட்டியவர். பழங்குடி மக்களின் முன்னேற்றத்திற்காக அயராது பாடுபட்டவர். மேலும் சமூக தொண்டாற்றுவதில் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டவர். அன்னாரது மறைவால் அவரை இழந்து வாடும் அவர் தம் குடும்பத்தினர் உள்ளிட்ட அனைவருக்கும் இப் பேரவை தனது அழ்ந்த இரங்கலையும் அனுதாபத்தினையும் தெரிவித்துக் கொள்கிறது என்று பேரவைத் தலைவர் அவர்கள் இரங்கல் தீர்மானத்தை படித்தார்.

இதனைத் தொடர்ந்து பேரவைத் தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின், துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின், அமைச்சர்கள் உள்ளிட்ட அனைத்து உறுப்பினர்களும் இரண்டு மணித்துளிகள் அமைதி காத்து மறைந்த பெருந்தகைகளுக்கு மரியாதை செலுத்தினர்.

இத்துடன் பேரவையின் நேற்றைய நிகழ்வுகள் நிறைவுற்றன.

## ஆண்டுதோறும் அரசின் உரை தயாரித்து அனுப்புவதும்;

# ஆளுநர் முரண்டு பிடித்து அதனை முறையாக வாசிக்காமல் தொடர்ந்து வருவதும் நல்லதல்ல!

## ‘தினகரன்’ நாளேடு தலையங்கத்தில் கண்டனம்!

சென்னை, ஜன. 22-

ஆண்டுதோறும் அரசின் சார்பில் உரை தயாரித்து அனுப்புவதும்; அதனை முறையாக வாசிக்காமல் ஆளுநர் முரண்டு பிடிப்பதும் தொடர்ந்து வருவது நல்லதல்ல என முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கண்டனம் தெரிவித்திருப்பதாக ‘தினகரன்’ நாளேடு தலையங்கத்தில் குறிப்பிட்டுள்ளது.



தினகரன்

ஜனவரி 21, 2026 புதன்கிழமை

ஆளுநரும், வெளிநடப்பும்

2026ம் ஆண்டின் முதல் சட்டப் பேரவை கூட்டத்தொடர் ஆளுநர் உரையுடன் தொடங்க வேண்டிய நிலையில், ஆளுநர் ஆர்.என்.ரவி உரையை வாசிக்காமல் தமிழ்நாடு சட்டப்பேரவையில் இருந்து வெளிநடப்பு செய்துவிட்டார். நான் தொடர்ச்சியாக தேசிய கீதம் இசைக்கப்பட வேண்டும் என்று வலியுறுத்தியும் அதை ஏற்காதது வருத்தமளிக்கிறது என்று தெரிவித்துவிட்டு ஆளுநர் வெளிநடப்பு செய்தார்.

அதை தொடர்ந்து பேசிய முதல்வர் மு.க.ஸ்டாலின், ஆண்டுதோறும் அரசின் சார்பில் உரை தயாரித்து அனுப்புவதும், அதனை முறையாக வாசிக்காமல் ஆளுநர் முரண்டு பிடிப்பதும் தொடர்ந்து வருவது நல்லதல்ல. ஆண்டின் தொடக்கத்தில் ஆளுநர் உரை என்ற நடைமுறையை விலக்கிடும் வகையில் அரசமைப்புச் சட்டத்தைத் திருத்துவதற்

அது வருமாறு:-

2026 ஆண்டின் சட்டப் பேரவை கூட்டத்தொடர் ஆளுநர் உரையுடன் தொடங்க வேண்டிய நிலையில், ஆளுநர் ஆர்.என்.ரவி உரையை வாசிக்காமல் தமிழ்நாடு சட்டப்பேரவையில் இருந்து வெளிநடப்பு செய்து விட்டார். நான் தொடர்ச்சியாக தேசிய கீதம் இசைக்கப்பட வேண்டும் என்று வலியுறுத்தியும் அதை ஏற்காதது வருத்தமளிக்கிறது என்று தெரிவித்து விட்டு ஆளுநர் வெளிநடப்பு செய்தார்.

அதைத் தொடர்ந்து பேசிய முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், ஆண்டுதோறும் அரசின் சார்பில் உரை தயாரித்து அனுப்புவதும், அதனை முறையாக வாசிக் காமல் ஆளுநர் முரண்டு பிடிப்பதும் தொடர்ந்து வருவது நல்லதல்ல. ஆண்டின் தொடக்கத்தில் ஆளுநர் உரை என்ற நடைமுறையை விலக்கிடும் வகையில் அரசமைப்புச் சட்டத்தைத் திருத்துவதற் கான முயற்சிகளை இந்தியா முழுவதும் இருக்கும் ஒத்த கருத்துக்களைக் கொண்ட அரசியல் கட்சிகள் துணையோடு நாடாளுமன்றத்தில் தி.மு.க. முன்னெடுக்கும் என்ற உறுதியையும் இந்த மாமன்றத்தில் அறிவித்து, நன்றி கூறி அமைகிறேன் என்றார்.

தொடர்ந்து ஆளுநர் உரை வாசிக்கப்பட்டதாக அவைக் குறிப்பில் பதிவு செய்ய வழிவகை செய்வதற்கான தீர்மானத்தை முதல்வர் முன்வைத்தார். அதன் மீது குரல் வாக்கெடுப்பு நடத்தப்பட்டது. பின்னர் அந்தத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

தமிழ்நாடு சட்டப்பேரவை கூட்டத்தொடரில் இருந்து ஆளுநர் ரவி வெளிநடப்பு செய்வது இது முதன்முறை அல்ல. முன்னதாக கடந்த 2023ம் ஆண்டு ஆளுநர் ரவி தனது உரையில் அரசு தயாரித்து தந்த அறிக்கையில் இடம் பெற்றிருந்த சில வார்த்தைகளைப் புறக்கணித்தார். அவர் கூற மறுத்த மகளிர் முன்னேற்றம், பெரியார், அம்பேத்கர், கலைஞர், மதச்சார்பின்மை போன்ற வார்த் தைகள் அவைக் குறிப்பில் இடம்பெறும் என்று முதல்வர் அறிவித்தார். இதனால் ஆளுநர் ரவி பாதியிலேயே புறப்பட்டுச் சென்றார். தொடர்ந்து கடந்த 2024ம் ஆண்டு, தமிழ்த் தாய் வாழ்த்துக்குப் பின்னர் தேசிய கீதம் இசைக்கப்படவில்லை எனக் குற்றஞ்சாட்டி ஆளுநர் தனது உரையை வாசிக்காமலேயே வெளிநடப்பு செய்தார். இந்த ஆண்டும், ஆளுநர் தனது உரையை வாசிக்காமல் வெளிநடப்பு செய்துள்ளார்.

ஆளுநர் ஏன் வெளிநடப்பு செய்தார் என்று விளக்கம் அளித்து ஆளுநர் மாளிகை வெளியிட்ட அறிவிப்பில், ஆளுநரின் மைக் மீண்டும் மீண்டும் அணைக்கப்பட்டது, அவர் பேச அனுமதிக்கப்படவில்லை. தமிழ்நாடு அரசு தயாரித்த உரையில் ஆதாரமற்ற பல தகவல்களும், தவறான தகவல்களும் உள்ளன. மக்களைப் பாதிக்கும் பல முக்கியப் பிரச்னைகள் புறக்கணிக்கப்பட்டுள்ளன. பெண்கள் பாதுகாப்புப் பிரச்சினை இந்த உரையில் முற்றிலும் புறக்கணிக்கப்பட்டுள்ளது. சட்டப்பேரவையில் தேசிய கீதம் மீண்டும் அவமதிக்கப்பட்டுள்ளது. மேலும், அடிப்படை அரசியலமைப்பு கடமை புறக்கணிக்கப்பட்டுள்ளது என்று பெரிய விளக்கம் அளிக்கப்பட்டுள்ளது.

இந்திய அரசமைப்புச் சட்டம் 76ன்படி, ஆளுநர் உரை என்பது மாநில அரசால் தயாரிக்கப்பட்டு ஆளுநரால் முழுமையாகப் படிக்கப்படவேண்டிய ஒன்றாகும். இதில் ஆளுநர் தனது சொந்த கருத்துகளை தெரிவிப்பதற்கோ, மாநில அரசால் தயாரித்து வழங்கப்பட்ட உரையில் நீக்கம் செய்வதற்கோ அரசமைப்புச் சட்டத்தில் இடமில்லை. மேலும் தமிழ்நாடு சட்டப்பேரவை தொடங்கிய பின்னர் முதலில் தமிழ்த்தாய் வாழ்த்து பாடப்படும். பின்னர் இறுதியில் தேசிய கீதம் இசைக்கப்படும். இதுதான் தமிழ்நாடு சட்டப்பேரவை மரபு. இந்த மரபுகளையும், அரசியலமைப்பு சட்டத்தை எல்லாம் புறந்தள்ளி அவை மாண்பு சீர்குலைக் கப்பட்டுள்ளது.

இவ்வாறு அத்தலையங்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# “ஊரக வேலை திட்டத்தை சீர்குலைக்கிறார் பிரதமர் மோடி”!

## ராகுல் காந்தி குற்றச்சாட்டு!

ரேபரேலி, ஜன. 22–

மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி, தனது மக்களவை தொகுதியான ரேபரேலிக்கு நேற்று முன்தினம் சென்றார்.

அங்கு கட்சித் தொண்டர்களிடையே அவர் கூறியதாவது:

மத்திய அரசு ‘மகாத்மா காந்தி ஊரக வேலை உறுதித் திட்டத்தின்’ பெயரை மாற்றியதன் மூலம் அந்தத் திட்டத்தை அவமதித்துள்ளது. மிக முக்கியமாக, விளிம்புநிலை மக்களுக்கு இத்திட்டம் வழங்கி வந்த பாதுகாப்பை அரசு திரும்பப் பெற்றுள்ளது. இது ஜனநாயகத்தின் வேர்கள் மீதான தாக்குதலாகும். இதன் மூலம் இந்த திட்டத்தை பிரதமர் மோடி சீர்குலைக்கிறார்.

மகாத்மா காந்தி ஊரக வேலை உறுதித் திட்டத்தைப் பாதுகாக்க காங்கிரஸ் நாடு தழுவிய இயக்கத்தை நடத்தி வருகிறது. நாங்கள் தொழிலாளர்களின் பக்கம் நிற்கிறோம், அவர்களின் உரிமைகளைப் பாதுகாக்க உறுதியுடன் இருக்கிறோம்.

ஆனால், நாட்டின் செல்வம் முழுவதும் கவுதம் அதானி மற்றும் முகேஷ் அம்பானி ஆகிய இரு தொழிலதிபர்களின் கைகளில் மட்டுமே குவிய வேண்டும் என்று பிரதமர் விரும்புகிறார்.

இவ்வாறு அவர் தெரிவித்தார்.

முன்னதாக, ரேபரேலியில் நடைபெற்ற கிரிக்கெட் போட்டி ஒன்றை ராகுல் காந்தி தொடங்கி வைத்தார்.